

# சாளரம்

CHAALARAM

ஒளி-06 கீற்று- 04

புரட்டாதி – மார்கழி

## இது ஒரு எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் தயாரிப்பு

அன்பான பெற்றோர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள் அனைவருக்கும் எமது வணக்கம்.

நீங்கள் அனைவரும் கோடை விடுமுறையை இனிதே களித்திருப் பீர்கள் என்று நம்புகின்றோம்.

## முக்கியச் செய்தி

இவ்வாண்டு இடம்பெற்ற தமிழ் GCSE International Cambridge University பரீட்சையில் எமது பாடசாலை மாணவர்கள் அனைவரும் திறமைச் சித்திகள் அடைந்துள்ளனர். பெரும்பாலான மாணவர்கள் மீண்டும் A*, A சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.அனைத்து மாணவர்களுககும் எமது பாராட்டுக்கள். (கழகத்தின் சார்பில்)

இது மட்டுமா இவ்வாண்டு அனைத் துலகத் தமிழ் மொழித் தேர்வு முடிவுகளும் வெளியாகியுள்ளன. எமது பாடசாலை மாணவர்கள் பலர் அதி விசேட சித்திகளுடன் சித்தி பெற்றிருப்பது வரவேற்கப்படவேண் டியதொன்று. ஆசிரியர்கள்,மாணவர் கள் அனைவருக்கும் எமது பாராட் டுக்கள். அனைத்து மாணவர்களுக் கும் பரீட்சை முடிவுகள் 06.09.13 அன்று கொடுக்ககப்படும்.

இவ்வாண்டும் இல்போர்ட் செல்வ விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா வின் போது எமது கழகத்தால் நடாத்தப்பட்ட தண்ணீர்ப்பந்தலில் கலந்து சிறப்பித்த மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் கழகத்தின் சார்பில் எமது மனமார்ந்த பாராட்டுக்கள்.

**விவேகானந்த சபையினால் நடாத்தப்படும் பரீஷ்சை நவம்பர் மாதம் 1ம் ஞாயிறு காலை நிகழும். அனைத்த வளர்நலை 2ம் வகுப்புமதல் 12ம் வரையுள்ள மாணவர்கள் பரீஷ்சை விண்ணப்பங்கள் 14/09/13 முன் கையளிக்க வேண்டும் என்பன அறியத்தருகின்றோம்.**

### <u>இந்தத் தவணைக்கான பாடசாலை நாட்கள்</u>

**06.09.2013 – தவணைக்கான பாடசாலை ஆரம்பநாள்**

13.09.2013 – வெள்ளிக்கிழமை

20.09.2013 – வெள்ளிக்கிழமை

27.09.2013 – **வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை**

04.10.2013 – வெள்ளிக்கிழமை

11.10.2013 – **வெள்ளிக்கிழமை வாணிவிழா**

18.10.2013 – வெள்ளிக்கிழமை

25.10.2013 – **வெள்ளிக்கிமை மாதாந்தப் பரீட்சை**

01.11.2013 – **இடைத்தவணை விடுமுறை**

**03.11.2013 – ஞாயிற்றுக்கிழமை விவேகானந்த சைவசமயப் பரீஷ்சை**

08.11.2013 – வெள்ளிக்கிழமை

15.11.2013 – வெள்ளிக்கிழமை

22.11.2013 – வெள்ளிக்கிழமை

29.11.2013 – **வெள்ளிக்கிழமை மாவீரர் தினம்**

06.12.2013 – வெள்ளிகிழமை

13.12.2013 – வெள்ளிக்கிழமை

20.12.2013 – **வெள்ளிக்கிழமை நத்தார் விழாவும் பாடசாலை விடுமுறையும்**

# எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் விளையாட்டுப் போட்டியும்

கடந்த யூலை மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இல்போர்ட் செல்வ விநாயகர் கோவில் தேர்த்திருவிழா நடைபெற்றது. தேரில் விநாயகப்பெருமான் வீதியுலாவரும் காட்சியை அருகில் உள்ள படத்தில் காணலாம். அன்றைய தினம் நல்ல காலநிலையோடு அதிகளவான பக்தர்கள் கலந்து தேரித்திருவிழாவினைச் சிறப்பித்தனர்.தேர்த்திருவிழாவின் போது எமது கழகத்தால் நடாத்தப்படும் தண்ணீர்ப் பந்தலருகே தேர் வரும் காட்சியையும் தண்ணீர்ப்பந்தலையும்காணலாம்.சாளரத்தின் சிறப்பிதழ் வெளியிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது.






எமது கழகத்தினால் நடாத்தப்பட்ட தண்ணீர்ப்பந்தலில் அனேக மாணவர் கள்,பெற்றோர்கள் ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். பக்தர்களுக்கு அனைவரும் முன்னின்று உதவியமை பாராட்டத்தக்கது. ஒவ்வொரு ஆண்டும் எமது கழகத் தண்ணீர்ப் பந்தலுக்கு தமது வீட்டு வாசலில் இடம் தருவதுடன் கொட்டகையும் போட்டு உதவிவரும் திரு திருமதி பாஸ்கரலிங்கம் தம்பதியினருக்கு எமது கழகத்தின் சார்பில் எமது மனமார்ந்த நன்றிகள்.

அருகேயுள்ள படத்தில் இவ்வாண்டு இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தின் ஏழாம் நாள் உற்சவத் தின் போது சண்முகப்பெருமான் வீதியுலா வரும் காட்சியயை காண்கிறீர்கள். ஆண்டு தோறும் இலண்டன் சிறீ முருகன் கோவில் திருவிழா ஆடிமாதத்தில் இடம்பெறுவது வழமை. அவ்வாறு இவ்வாண்டும் சண்முகப் பெருமானது அழகான வீதியுலாக் காட்சியை சாளரம் உங்களுக்காக தந்துள்ளது. முருப்பெருமானது தேர்த்திருவிழா கடந்த மாதம் 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அத் தேர்ஊர்வலத்தையே கீழே உள்ள படத்தில் காணலாம்.







# விநாயகர், முருகன் கோயில் திருவிழாப் படங்கள்



இலண்டன் சிறீமுருகன் ஆலயத்தில் இடம் பெற்ற முருகப் பெருமானின் திருக்கல்யாண வைபவத்தை அருகில் உள்ள படத்தில் காணலாம். மண்டபம் நிறைந்த பக்தர்கள் கூட்டத்தில் முருகப் பெருமானின் திருக்கல்யா ணம் இனிதே நடைபெற்றது. திருக்கல்யாணத்தைத் தொடர்ந்து முருகப் பெருமான் தனது சக்திகளுடன் திருவீதி உலா வந்தருளினார்

இல்போர்ட் செல்வ விநாயகர் ஆலயத் திருவிழாவின் மூன்றாம் திருவிழாவின் போது எமது தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்ச்சிகளை வழங்கி வருவது வழக்கம். அந்த வரிசையில் இவ்வாண்டும் எமது தமிழ்ப்பாடசாலை மாணவ,மாணவிகள் சிறப்புச் சொற்பொழிவுகளும், மிருதங்க இசை நிகழ்ச்சியும் வழங்கினார்கள். அந்நிகழ்ச்சிகளையே அருகில் உள்ள படத்தில் காண்கிறீர்கள்.











எமது தமிழ்ப் பாடசாலை மாணவர்களை சிவப்பு, பச்சை, மஞ:சள் நீலம் என்ற வர்ணங்களில் நான்கு இல்லங்களாகப் பிரித்து இந்த இல்லங்களுக் கடையே மெய்வல்லுனர் போட்டிகளை ஆண்டு தோறும் நடாத்தி வருகின்றோம்.. அந்த வரிசையில் இவ்வாண்டும் எமது பாடசாலை இல்ல விளையாட் டுப் போட்டியில (06.07.2013 சனிக்கழமை) இடம் பெற்ற அணிசகுப்பினையே அருகில் உள்ள படத்தில் காணுகின்றீர்கள். இல்ல ஆசிரியைகள் மாணவ மாணவியரைத் திறம்படப் பயிற்றுவைத்து இவ்வணிவகுப்ப மரியாதையினை எமது பிரதம

விருந்தினர் Sensei Mr ராமதாஸ் Mrs ராமதாஸ், மற்றும் சிறப்பு விருந்தினர்கள் திரு,திருமதி குகதாசன் முன்னிலையில் நடாத்தினார்கள். அருகில் உள்ள படங்களில் அணிவகுப்பு மரியாதையதைத் தொடர்ந்து எமது தமிழ்க் கழக கீதத்ததை பாடசாலை மணவியர்கள் பாடுவதையும், அதனைத் தொடர்ந்து பாடசாலையின் இவ்வாண்டுச் சிறந்த மாணவன் செல்வன் தனன் சுகுணானந்தராஜா எமது பிரதம விருந்தினுருடன் சேர்ந்து எமது கழகக் கொடியை ஏற்றத் தொடர்ந்து இல்லக் கொடிகளை இல்லத் தலைவர்கள் ஏற்றிவைத்து விளையாட்டுப் போட்டியை இனிதே ஆரம்பித்து வைப்பதையும் காணலாம். இன்னொரு படத்தில் விநோத உடைப் போட்டியின் ஓர் பகுதியைக் காண்கிறீர்கள்.









# Tenali Rama and the Greedy

Ramakrishna earned the affection and the esteem of the king and the people. He was a comic poet and looked, like an ignorant man; but he was pious and on the side of justice. He used his hurmour to set thins right whenever injustice was done.

Krishnadevaraya's mother was a very orthodox woman. She had visited many holy places and had performed religious rites; she had given much in charity. Once she wanted to give fruit in charity and informed so to her son.

Krishnadevaraya who had great respect for his mother immediately got delicious mangoes from Ratnagiri. But on the auspicious day when she was to present those fruits to Brahmins, the king's mother died.

The religious rites connected with her death went on for several days. Meanwhile, the king called a few Brahmins and said, "My mother's last wish was to offer mangoes to Brahmins. But she died before the wish could be fulfilled. What should I do now that she might earn the merit for giving away the fruits?"

The greedy Brahmins replied: "Your Highness, only if you offer mangoes made of gold to Brahmins will your mother's soul rest in peace."

Ramakrishna came to know of this. The next day he went to the houses of those Brahmins, and asked them to come to his house next to perform his mother's ceremon.

The Brahmins came to Ramakrishna's house after receiving the gold mangoes from the king. Ramakrishna's servants closed all the doors of the house. They brought red-hot iron bars and stood before the Brahmins!

The Brahmins were taken aback. Then Ramakrishna told them His mother had knee pains and as remedy wanted Ramakrishna to burn her with read hot rods but she died before he could do it. So he now wanted to execute her wish. When the Brahmins said he was unjust towards them, Ramakrishna says there is nothing unjust because they had just taken golden mangoes from the king.

Then the Brahmins understook their folly and left the golden mangoes at Ramakrishna's house and left.

Later when Krishnadevaraya asked Ramakrishna why he had behaved like that with the Brahmins, Ramakrishna says the palace treasury should not be exploited by these selfish people it is not there to feed lazy follows. It is there to serve the people.

---


# AJ

## Accountants Ltd

We are an established firm in Essex.

Mobile : 07940 765443

Email: ajaccountants@live.com

We do :

- Company Formation
- Self-Assessment Tax Return
- Personal Tax
- Company Accounts
- Book Keeping
- VAT Returns
- Wages / Payroll
- Capital Gains Tax




யோகா வகுப்புக்கள்

பெற்றோர்களே எமது தமிழ்ப்
பாடசாலை நேரமான மாலை
6.30 மணி முதல் 8.00 மணிவரை ஒவ்வொரு
வெள்ளிக்கிழமை களிலும் பாடசாலை மேல்
மண்டபத்தில் பயிற்று
விக்கப்பட்ட திறமைமிக்க ஆசிரியரால்
இலவசமாக யோகா வகுப்புக்கள்
நடாத்தப்படுகின்றன.
பெற்றோர்களே இது உங்கள் உடல் நலத்தைப்
பேணுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம். நோயற்ற
வாழ்வேகுறைவற்ற செல்வம். சுவர்
இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்ற
வாசகங்களுக்கு அமைய இந்த அரிய
சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலவசமாக
யோகா வகுப்புக்களில் உடனடியாக சேர்ந்து
பயனடையுங்கள்.
தயவு செய்து இதனைப் பயன்படுத்
துங்கள்..உங்கள் அனைவரையும் எதிர்பார்க்
கின்றோம்.